# தந்தை பெரியாரின் பொன்மொழிகள்



29
05
T.18729

விலை. 3.00

# பெரியாரின் பொன்மொழிகள்

## ஒழிக்கப்பட வேண்டியவை!

1. மக்களிடம் உள்ள உணர்ச்சி, ஒழுக்கம் ஏற்பட வேண்டுமானால் சினிமா ஒழிக்கப்பட வேண்டும்.
2. நீதி நேர்மை ஏற்பட வேண்டுமானால் வக்கீல்முறை ஒழிக்கப்பட வேண்டும்.
3. நாட்டில் காலிகள், அயோக்கியர்கள் ஒழிக்கப்பட வேண்டுமானால் பத்திரிகைகள் பெரிதும் ஒழிக்கப் படவேண்டும்.
4. அரசியலில் நல்ல ஆட்சியும், நாணயமும் ஏற்பட வேண்டுமானால் தேர்தல்முறை ஒழிக்கப்பட வேண்டும்.
5. வியாபாரத்தில் நாணயக் குறைவும், கள்ள வியா பாரமும் ஒழிக்கப்பட வேண்டுமானால் லைசன்ஸ், பெர்மிட், கட்டுப்பாடு முறை ஒழிக்கப்பட வேண் டும்.
6. தொழில் துறையில் தொழிலாளர்களிடையே சுகமும், நாணயமும்; பொறுப்பும் ஏற்பட வேண்டு மானால், லாபத்தில் பங்கு கொடுத்து, தொழி லாளர் கூட்டம் ஒழிக்கப்பட வேண்டும்.
7. அய்க்கோர்ட்டில் சமூக நீதி வேண்டுமானால் பார்ப்பன[illegible] ஒழிக்கப்பட வேண்டு[illegible]

T018729

''ஒவ்வொரு பெண்ணும் தானும் ஏதாவது சம்பாதிக்கும் தகுதி பெறத்தக்க ஒரு தொழில் கற்றிருக்கவேண்டும். குறைந்தது தன் வயிற்றுக்குப் போதுமான அளவாவது சம்பாதிக்கத் தகுந்த திறமை இருந்தால், எந்தக் கணவனும் தன் மனைவியை அடிமையாக நடத்த மாட்டான்.''

''பெண் மக்கள் அடிமையானது ஆண் மக்களால்தான் ஆண்மையும், பெண் அடிமையும் கடவுளாலே ஏற்படுத்தப் பட்டதாக எல்லா ஆண்களும் கருதுவதும், பெண்கள் அதை உண்மை என்று பரம்பரை பரம்பரையாக நினைத்துக்கொண்டிருப்பதும்தான் பெண் அடிமைத்தனம் வளர்வதற்கு காரணமாகும்.''

''திருமணம் செய்வதற்குமுன் பொருத்தம் பார்க்கிறார்களே, அதில் ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் சம தோற்றம், சம அன்பு, ஒத்த அறிவு, கல்வி, ஒற்றுமை இருக்குமா என்று கருதுவதில்லை.

அதற்கு மாறாக, நமது பிள்ளைகளுக்கு பெண் தலை வணங்கி கட்டுப்பட்டு நல்லஅடிமையாய் இருக்குமா என்ற கருத்தில், மாடுகளை விலைக்கு வாங்குவதற்கு என்னென்ன பொருத்தங்கள் பார்க்கிறோமோ, அதையேதான் பெண்கள் பிரச்னையிலும் பார்க்கிறார்கள்.''

''தாலிகட்டுவது என்பது அன்றுமுதல் அப்பெண்ணை தனக்கு அடிமைப் பொருளாய் ஏற்கிறான் என்பதும், அப் பெண் அன்று முதல் அந்த ஆணுக்கு அடிமையாகி விட்டாள் என்பதுமான கருத்தைக் குறிப்பிடுவதற்குத் தான். இதன் காரணமாக கணவன் மனைவியை என்ன செய்தாலும் யாருக்கும் கேட்க உரிமையில்லை. கணவன் தவறான முறையில் நடந்தால் அவனுக்குத் தண்டனை கிடையாது.''

"இந்து மதத்தில் கல்வித் தெய்வமும், செல்வத் தெய்வமும் பெண் தெய்வங்களாயிருந்தும் இந்துமதக் கொள்கையின்படி பெண்களுக்குக் கல்வியும் சொத்தும் இருக்க இடமில்லை ஏன்?"

''பெண்ணடிமை என்பதற்குள்ள காரணங்கள் பலவற்றுள்ளும் சொத்துரிமை இல்லாதது ஒன்றே மிகவும் முக்கியமானதாகும்.''

''நமது இலக்கியங்கள் யாவும் நியாயத்திற்காக—ஒழுக்கத்திற்காக எழுதப்பட்டிருந்தால், பெண்களுக்கு என்னென்ன நிபந்தனை வைத்திருக்கிறோமோ அவ்வளவு நிபந்தனைகளையும் ஆண்களுக்கும் வைத்திருக்க வேண்டுமல்லவா?''

''குழந்தை மணம் ஒழிந்து, திருமண ரத்து, விதவை மணம், கலப்பு மணம் திருமண உரிமை இருக்குமேயானால் இன்றுள்ள விபச்சாரத்தில் 100க்கு 90 பகுதி குறைந்து போகும்.''

''ஆணும் பெண்ணும் பதிவாளர் அலுவலகத்திற்குப் போய் ''வாழ்க்கைத் துணைவர்களாகி விட்டோம்'' என்று கையெழுத்துப் போட்டுவிட்டு வந்துவிட்டால் போதும், அந்த வெறும் கையெழுத்துத் திருமணத்திற்கு அதிக மதிப்பும், நன்மையும், சுதந்திரமும் உண்டு.''

''திருமணம் என்பது, மணமக்களை மட்டுமே பொறுத்ததல்ல. நாட்டின் முன்னேற்றத்துக்கும் தொடர்பு கொண்டிருக்கிறது.''

'நான் சொல்வதை நீங்கள் நம்புங்கள்! நான் சொல்வது கடவுள் வாக்கு; நம்பாவிட்டால் நரகம் வரும்; நாத்திகர்கள் ஆகிவிடுவீர்கள்' என்ற வேதம். சாத்திரம்

புராணம் போல, நான் உங்களை அடக்கு முறைக்கு ஆளாக்கவில்லை. நான் சொல்வது உங்கள் அறிவு ஆராய்ச்சி, புத்தி, அனுபவம் இவைகளுக்கு ஒத்துவரா விட்டால் தள்ளிவிடுங்கள்; ஒத்து வந்தால் காரியத்தில் கொஞ்சமாவது செய்ய முற்படுங்கள். உங்கள் சகோதரர் களுக்கும் இதைச் சொல்லி அவர்களையும் ஈடேற்றுங்கள் என்றுதான் நான் சொல்லுகிறேன். இப்படிச் சொல்வத னால் எனக்கு இதில் ஒரு சுயநலப் பலனும் இல்லை என்பதையும் அறியுங்கள்.

மதம் என்பது நாட்டிற்கோ, ஒரு சமூகத்திற்கோ, ஒரு தனி மனிதனுக்கோ எதற்காக இருக்க வேண்டியது? ஒரு தேசத்தையோ, சமூகத்தையோ கட்டுப்படுத்தி, ஒற்றுமைப் படுத்துவதற்காகவா? பிரித்து வைப்பதற்காகவா? அது ஒரு மனிதனின் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டதா? அல்லது ஒரு மனிதனின் மனச்சாட்சியைக் கட்டுப்படுத்தக் கூடியதா? மனிதனுக்காக மதமா?மதத்துக்காக மனிதனா? என்பவைகளைத் தயவு செய்து யோசித்துப்பாருங்கள்.

இந்து என்பதற்குப் பொருள் என்ன? இந்து மதம் என்பதைத் தவிர மற்ற மதங்கள் என்பவைகள் இம்மாதிரி இல்லாமல், மதம் என்பதற்கு முன்னால் ஒரு தனிப்பட்ட மனிதனின் பெயரை வைத்துப் பின்னால் மதம் என்பதைக் கூட்டிக் ‘கிறித்தவ மதம்’, ‘முகமதிய மதம்’, ‘புத்த மதம்’ ‘இராமானுச மதம்’, ‘சங்கராச்சாரிய மதம்’ என்பது போலச் சொல்லப்படுகிறது. இம்முறையில் ‘இந்து மதம்’ என்பது எந்த ஆசாமியை உடையது? யாருடைய கொள்கை என்று பெயர் கொண்டது? ஒன்றுமே இல்லா மல் வெறும் உச்சரிப்பைத் தவிர, யாதொரு பொருளுமற்ற தான, ஒலிகொண்ட வார்த்தையை, நமது மதத்திற்குப் பெயராக வைத்துக் கொண்டிருக்கிறோமா? இல்லையா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

கடவுள் எல்லோருக்கும் பொதுவானவர். அவர் எங்கும் உள்ளவர் என்கிற தத்துவம் நம்முடைய மதத்துக் கடவுளுக்கும் உண்டானால், நாம் கடவுள் கிட்டத்தில் போகக்கூடாது, கோயிலுக்குள் வரக்கூடாது. மற்றொருவர் மாத்திரந்தான் கடவுளைத் தொடலாம்; கழுவலாம்; வேட்டி துணிகட்டலாம் என்கிற கொடுமைகள் அதற்கு ஏற்படுத்த முடியுமா! நாம் இந்த மதத்தை ஒப்புக்கொண்டு அதில் கண்ட சாமிகளையும் ஏற்றுக்கொண்டு, அதற்காகக் கோயிலும் கட்டிச் சொத்தும் விட்டு, நாம் வணங்கவும் தினம் போய் வருவதினால் நமக்கு ஏற்படுகிற பலன் என்ன என்பதைப்பற்றிச் சற்று யோசித்துப் பாருங்கள்.

'சர்க்கார் நம்மிடம் வரி வாங்குகிறார்கள்; கொள்ளை அடிக்கிறார்கள்; அது செய்யவில்லை, இது செய்யவில்லை வீண் செலவு செய்கிறார்கள்; மக்களுக்குப் படிப்புஇல்லை; ஒழுக்கம் இல்லை' என்றுசத்தம் போடுகிறோமே, அப்படிபட்ட நாம், இந்தச் சாமிகள் பெயரால் அடிக்கப்படும் கொள்ளைகளைக் கொஞ்சமாவது கவனிக்கிறோமா? அல்லது, அவைகளை நிறுத்தவாவது பாடுபடுகிறோமா?

கோயில்களுக்கு வருகிற பக்தர்கள் போக்குவரவு, தேங்காய், பழம், நெய், தயிர், பஞ்சாமிர்த அபிடேகம், மேளம், தாளம், தாசி, சதிர், பாட்டுக்கச்சேரி, உற்சவம் முதலியவைகளில் செலவு செய்யும் பணம் எவ்வளவு? இவை எல்லாம் எதற்காக உபயோகப்படுகிறதென்பதையும் யோசியுங்கள். 'நீங்கள் கீழ்சாதி; பூசைபண்ணுகிறவனும், சிலரும் மாத்திரம் உயர்ந்த சாதி; ஆதலால் நீங்கள் கொடுக்க வேண்டியது மற்றவன் சாப்பிட வேண்டியது' என்பதல்லாமல், வேறு எதற்கு உபயோகப்படுகிறது? என்பதை நன்றாய்க் கவனியுங்கள். இந்த மாதிரி செய்யும்படி உங்களை எந்தச் சாமி கேட்கிறது; அல்லது கட்டளை இடுகிறது?

## ஆரியன் உழைக்கிறானா?

ஆரியன் தெருக் கூட்டுகிறானா?
மூட்டை தூக்குகிறானா?
வண்டி ஓட்டுகிறானா? பியூனாய் இருக்கிறானா?
உழுகிறானா? அறுப்பு அறுக்கிறானா?
சரீரத்திலிருந்து ஒரு துளி வேர்வையோ,
நகத்தில் கடுகத்தனை அழுக்கோ
படியும்படி ஏதாவது உடலுழைப்புச் செய்கிறானா?

—19-4-1940 சேலம் சொற்பொழிவு

—குடியரசு 28-4-1940

## திராவிடனுக்கு மான உணர்ச்சி வேண்டாமா?

திராவிட நாட்டில் திராவிடர்களை
ஆரியன் சித்ரவதை செய்கிறான்;
திராவிட நாட்டில் திராவிடரை
ஆரியன் தீண்டப்படாதவன் என்கிறான்;
தாசிமகன்—வேசிமகன்—அடிமை
என்கிறான்— என்று எந்தத் திராவிடனுக்கு
மான உணர்ச்சி ஏற்பட்டு
உள்ளம் துடிக்கிறது?
இரத்தம் துடிக்கிறது?
திராவிடர்களுக்கு ஆரியனா குரு சன்னிதானம்?
திராவிடனுக்கு ஆரியனா சுவாமி-எஜமான்-அதிகாரி-
ஜட்ஜ்-கலெக்டர்-மாஜிஸ்ட்ரேட்-குலகுரு?
நாம் சிறிதும் மான உணர்ச்சிஅற்ற சமுதாயம்;

நம்நாடு ஒரு காட்டுமிராண்டி
அடிமை நாடு என்பதற்கு இதைவிட
வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

—30-6-1946 திருவல்லிக்கேணி சொற்பொழிவு

—குடியரசு 6-7-1946

## வடக்கனே எடுத்துக் கொள்வதா?

வெள்ளைக்காரன் நம்மவர்கள் இடத்திலிருந்துதானே
நாட்டை வாங்கினான்?
அப்படி வாங்கிய நாட்டை, நம் நாட்டானிடம்
கொடுத்துவிட்டுப் போனான் என்றால்,
எல்லாவற்றையும் வடநாட்டானே எடுத்துக் கொண்டால்
என்ன நியாயம்?

—விடுதலை 8-4-1950

## வடவர்-பார்ப்பனரை ஏன் விரட்டக்கூடாது?

வடநாட்டாரும் பார்ப்பனரும் ஓடவேண்டும்.
ஏன் நாம் அவர்களைப் பகிஷ்காரம் பண்ணக்கூடாது?
வடநாட்டான் கடையில் சரக்கு வாங்கக்கூடாது
என்றால் என்ன தப்பு?
பார்ப்பானுக்கு சிரைக்கக் கூடாது: பால்,
அரிசி கொடுக்கக் கூடாது என்றால் என்ன தப்பு?
பார்ப்பான் நம்மைத் தொட்டால் தீட்டு
என்று எட்டி நிற்கிறானே,

அவனைத்தானே பகிஷ்கரிக்கச் சொல்லுகிறோம்.
அவனைப்பகிஷ்காரம் செய்தால் என்ன தப்பு?

—10-2-1951 சென்னை கிருஷ்ணாம்பேட்டை
சொற்பொழிவு

—விடுதலை 14-2-1951

## நம் செல்வம் நம்மைவிட்டுப் போகலாமா?

ஏன் நம்நாட்டுச் செல்வம் அன்னியனுக்குப்
பயன்படுகிறது?
நம்முடைய நாடு இன்றைய தினம் விடுதலை அடைய
வேண்டுமானால், நம்நாட்டுப் பொருளாதாரம்
நம்மை விட்டுப் போகாமல் இருக்க வேண்டும்
என்பது முக்கியம் இல்லையா?

—7-4-1951 காஞ்சி சொற்பொழிவு
—விடுதலை, 19-4-1951

## மந்திரிப் பதவியால் பயனுண்டா?

நமக்கு மந்திரிப்பதவிகள் கிடைக்கும் என்றால் அவை
எதற்கு உதவும்?
வடநாட்டானுக்கு நிபந்தனை இல்லாத கூலியாக
இருக்கவும், சொத்து சுயநலத்திலே பூரண சுதந்திரமாக
இருக்கவும்தான் உதவுமே தவிர
நம்நாட்டு மக்களின் நலத்திற்கு-முன்னேற்றத்திற்கு-
பொருளாதார வளத்திற்கு என்ன சுதந்திரம் இருக்கிறது?

22-7-1951 சேலம் சொற்பொழிவு

—விடுதலை 27-7-51

## பிரிவினை ஏன்? பேதம் ஏன்?

சுதந்திர நாட்டில் பிராமணன், சூத்திரன்,
பறையன், சக்கிலி இருக்கலாமா?
அப்படி இருக்கும் நாடு சுதந்திர நாடா?
நரக நாடா?

இதை ஒழிக்கப் பாடுபட இந்த நாட்டில் உரிமை
இருக்கிறதா?
உரிமை கேட்க வழி இருக்கிறதா?
சுதந்திர நாட்டில் மனித சமுதாயத்தையே
அடிமைப்படுத்தி மடையர்களாக ஆக்கிவைத்திருக்கும்
இனத்தினர் பார்ப்பனர்
மந்திரியாய், தலைவராய் இருக்கின்றார்கள் என்றால்
இது சுதந்திர நாடாகுமா?

—விடுதலை 15-8-57

## உரிமை இல்லையா?

நான் பிறந்த நாடு எனக்கு வேண்டும்!
என்று நான் கேட்கக்கூடாதா?
''எதைச் செய்தாலும் சகித்துக் கொள்வேன்,
ஆனால் நாடு பிரிவதை மட்டும் சகிக்க மாட்டேன்''
என்பது எவ்வளவு திமிர்?

—விடுதலை 1-12-1957

## நம்மால் ஆள முடியாதா?

நம்நாடு தனியாகப் பிரிந்தே ஆக வேண்டும்.
ஒரு சுண்டைக்காய் 'எகிப்து' உலகத்தையே
கலக்கிவிட்டதே!
நம்மால் ஆளமுடியாதா?

—விடுதலை 1-12-1957

## எதிர்த்துக் கேட்கக்கூடாதா?

பார்ப்பான் சாதியை-மதத்தை சமுதாயத்தை,
அந்தஸ்தை நிலை நிறுத்துவது அடிப்படையாக
ஆக்கிச் சட்டம் செய்து கொண்டான்.
அதைப் பற்றி யாரும் பேசக்கூடாது.
அசெம்பிளியில்,பார்லிமெண்டில் சத்தியம் செய்வதென்ன?
'இந்திய அரசியல் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு
அடங்கி பக்தி விசுவாசத்துடன் நடப்பேன்'
என்றுதான் சத்தியம் செய்கிறான்.
அசெம்பிளியிலோ, பார்லிமெண்டிலோ அடிப்படை
உரிமைகள் என்பவை பற்றி யாரும் பேசக்கூடாதா?

—விடுதலை 20-12-1958

## ஜனநாயக ஆட்சியா? சர்வாதிகார ஆட்சியா?

சக்கரவர்த்தி ஆட்சி நடந்த காலத்தில்
ஜின்னாவுக்கு நாடுபிரித்துக் கொள்ளவேண்டும் என்ற
ஆலோசனையைச் சொன்னவன் நான்தான்.
பிரியவில்லையா?
நாடுபிரிவது,பொதுவாக எந்த அரசியல் சட்டத்திற்கும்
விரோதம் அல்ல.
சாதி ஒழியவேண்டுமென்றால் அதற்கு மதம்
இடம் தரவில்லை.
பார்ப்பான் இடம்தரவில்லை.
சட்டம் இடம்தரவில்லையானால் இவற்றில்
இருந்தெல்லாம் பிரிந்துகொள்ள வேண்டியதுதானே?
பிரிந்தால் ஆபத்து? கஷ்டம் என்கிறார்களே
எப்படி ஆபத்து?
பிரிந்துவிட்டால் வடநாட்டுக்குப் போகிற வருமானம்

நமக்கு மிச்சமில்லையா?
அவனுக்கு வேண்டுமானால் வருமானம் நஷ்டமாகும்.
தமிழர்நாடு தமிழருக்கானது என்றால்
அவர்கள் எல்லாம் இங்குவருவார்கள்.
அவர்கள் எல்லாம் வருவார்களானால்
இங்கு இருக்கும் அன்னியர்கள் வெளியே
போக வேண்டியதுதானே?

பாகிஸ்தானில் இருக்கும் இந்தியர்களை
அவர்கள் 'போ' என்று சொல்லவில்லையா?
நமது தமிழ்நாடு ஏறத்தாழ நாலு கோடிமக்களைக்
கொண்டது.
ரஷ்யா, அமெரிக்கா, சீனா, ஜப்பான் முதலிய
7, 8 நாடுகள் நம்மைவிடப் பெரியவை.
25 லட்சம் மக்கள் தொகை கொண்ட நாடெல்லாம்
தனிநாடு.
அதுவும் அய்-நா-வில் மெம்பராகவே இருக்கின்றது.
4 கோடி மக்களைக் கொண்ட தமிழ்நாட்டுக்கு என்ன
நஷ்டம் வந்துவிடும்?
பெரிய நாடாக மட்டுமே இருப்பதால்
இலாபம் என்ன?
பாகிஸ்தான்காரன் இந்திய நாட்டு
எல்லையில் சுடுகிறான், உதைக்கிறான்.
கிராமம் கிராமமாகச் சேர்த்துக்கொள்கிறானே
என்ன செய்ய முடிந்தது?
அதுதான் போகட்டும் கோவாவை என்ன செய்தாய்?
கோவாவில் இந்தியர்கள் சுடப்பட்டதற்கு யார் காரணம்?
நேருவும், பிரசாதும்தான்!
நியாய விசாரணை நடத்த வேண்டுமானால்
இவர்களைத்தான் அதற்கு குற்றவாளிகளாக்கித்
தண்டிக்க வேண்டும்
போர்ச்சுக்கீசியர்களுடைய மொத்த ஜனத்தொகை
1¾ கோடி கூட இருக்காது.

அவனையே ஒன்றும் செய்ய முடியாதபோது
தமிழ்நாட்டை என்ன செய்துவிட முடியும்?
இதற்கெல்லாம் கடுதாசியைக் கொளுத்தினால்
தீர்ந்துவிடுமா என்பீர்கள்.
ஆம் தமிழ்நாடு நீங்கிய இந்திய யூனியன்
படத்தை வைத்துக் கொளுத்தினால் நம்முடைய
எதிர்ப்பைக் காட்டினதாக ஆகும்.
முன்பு இந்திய அரசியல் சட்டத்தைக்
கொளுத்தினோமே என்ன ஆயிற்று?
வெளிநாட்டுப் பத்திரிக்கைகளில் எல்லாம் செய்தி
வெளியாயிற்றே!
இந்திய யூனியன் படத்தைக் கொளுத்தினார்கள்
என்பதை வெளிநாட்டார் அறிந்தால் இந்த ஆட்சியை
என்னவென்று எண்ணுவார்கள்?
இவனுக்கு என்ன மதிப்பு வரும்?
இது என்ன ஜனநாயக ஆட்சியா, சர்வாதிகார ஆட்சியா
என்று நினைக்க முடியுமா?

—விடுதலை—20-12-1958

## தேர்தல் ஊழலே தேச ஊழலின் நாற்றங்காலா?

எவனொருவன் தன் நாட்டுக்குத் தொண்டுசெய்ய எந்த ஸ்தாபனத்தின் தேர்தலில் அபேட்சகராக நிற்பதனாலும் அவன் பத்தாயிரம் ரூபாய் முதல் மூன்று இலட்சம் ரூபாய் வரையில் செலவு செய்துதான் வெற்றி தோல்வி அடைய முடியும் என்ற நிலை எப்படி யோக்கியமான நிலையாகும்?

—விடுதலை 15-8'-72

## சுதந்திர ஆட்சியா? அடிமை ஆட்சியா?

தேசத்துக்குப் பூரண சுதந்திரம் கிடைத்து இன்றைக்கு 25
ஆண்டுகள் ஆனபிறகும் இந்த பூரண சுதந்திரம்
உள்ள நாட்டில் 54 கோடி மக்களில் 39 கோடி பேர்
தற்குறி என்றால், 100க்கு 70 மக்கள் கையெழுத்துப்போடத்
தெரியாத தற்குறிகளாக இருக்கிறார்கள் என்றால்,
மொத்த ஜனத்தொகையில் சரிபகுதிப் பேர்களான
பெண்கள்
100க்கு 82 சதவீதம் தற்குறி என்றால், தேசம் பூரண
சுதந்திரம் பெற்று 25 ஆண்டுகளுக்குப் பிறகும்
இந்த நிலை என்றால்-இதற்குப் பெயர்
சுதந்திர ஆட்சியா அடிமை ஆட்சியா என்று கேட்கிறேன்?

—விடுதலை 15-8-1972

❋

எங்களுடைய எண்ணம் மக்களையெல்லாம் அறிவாளிகளாக - சிந்தனையாளர்களாக ஆக்க வேண்டும் என்பது தான்.

அறம் என்றால் தடிப்பசங்களுக்குச் சாப்பாடு போடுவதோ கோயில்கட்டுவதோ அல்ல; மக்களுக்கு தம்மாலான நல்லனவற்றைச் செய்வது.

கடவுள் கதையும், சாஸ்திரமும் எதுவானாலும் வடநாட்டு மொழியில் ஏற்பட்டு தமிழில் மொழி பெயர்க்கப் பட்டதாகத்தான் இருக்கும்.

இந்தியாவில் சமதர்மக் கொள்கை என்றைக்காவது ஒருநாள் ஏற்படும் என்று நினைப்போமேயானால் அது தேசீய காங்கிரசும், காந்தியமும் ஒழிந்த நாளாகத்தான் இருக்கும்.

மூடநம்பிக்கை என்பது தெளிவும்-விளக்கமும் இல்லா மல் ஒரு கருத்தை ஏற்றுக்கொள்வதும், நம்புவதுமாகும்.

'தேசியம்' என்ற சூழ்ச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டதற்கு காரணமே பார்ப்பனியமான சனாதன தர்மங்களைப் பலப் படுத்தவே ஒழிய வேறில்லை.

எனது எண்ணம் ஈடேறுமானால், அது உச்சஸ்தானம் பெற்ற உயரிய கூட்டு வாழ்க்கை முறையாகத்தான் இருக்கும்.

மதமும், வைதீகமும்தான் காந்தியார் கொலை பாதகத்துக்குத் தூண்டுகோலாய் இருந்திருக்கலாம் என்பது எனது கருத்து.

படிப்பு என்பது இந்நாட்டில் வயிறு வளர்ப்பதற்கு ஆகவே பயன்படுகிறது. படிப்பின் பயனெல்லாம் அறிவு பெறுவதற்கு ஆகவே இருக்கவேண்டும்.

சுரண்டல் என்பது ஒருவன் தன்னுடைய தேவைக்கு மேற்பட்டு வேறு இடத்திலே சம்பாதித்துக் கொண்டு அந்தப்படி சம்பாதித்த சொத்துகளைத் தன்னுடைய நாட் டுக்கு எடுத்துச் சென்று செலவு செய்வதாகும்.

நமது கல்யாண தத்துவம் எல்லாம் சுருக்கமாய்ப் பார்த்தால், பெண்களை ஆண்கள் அடிமையாகக் கொள் வது என்பதைத் தவிர, வேறு ஒன்றுமே அதிலில்லை.

பார்ப்பனக் கடவுள்களுடைய யோக்கியதையைச் சொல்லப் புறப்பட்டால், கையும், வாயும், காகிதமும்கூட நாற்றமெடுத்து விடும்!

சங்கராச்சாரியார் என்பவர்கள் லோககுரு என்பதாக அழைக்கப்பட்டு கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொள்ளையடித்து வெறும் பார்ப்பனர்களுக்கே பொங்கிப் போட்டு பார்ப்பனப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

பார்ப்பனியத்தின் கடைசி மூச்சு ஒழியும்வரை திரா விடர் இயக்கம் மட்டும் இருந்தே தீரும்.

மாடுகள் தினவெடுத்துக்கொண்டால் உரசிக் கொள் வதற்கு தேய்ப்புக்கல் அடித்து நட்டு வைக்கும் இந்து மக்கள் விதவைகளுக்கு என்ன செய்திருக்கின்றார்கள்?

எப்படியிருந்தாலும் முடிவில் 'தேசத்துரோகிகள்' எனப் படுபவர்களும், நாஸ்திகர்கள் எனப்படுபவர்களும்தான் வெற்றி பெறுவார்கள் என்பது உறுதி.

சரி என்று பட்டதைச்சொல்லும் தன்மை எவனிடமிருந் தாலும் அவன் வசைகள் பலவற்றிற்கும் மற்றும் அநேக காரியங்களுக்கும் தயாராயிருக்க வேண்டியவன்தான்.

மதக்குறி என்பது மாட்டு மந்தைக்காரன் தனது மாடு களுக்குப் போடும் அடையாளம் போன்றதே!

உங்களுடைய மூடநம்பிக்கை அப்படியே இருந்துவர வேண்டும் என்றுதான் இந்நாட்டுப் பத்திரிகைகள் ஒவ் வொன்றும் சாதகப் பலன்களை வெளியிடத் தொடங்கி இருக்கின்றது.

எவனொருவன் பதவி வகிக்க வேண்டும் என்கிற ஆசை இல்லாமலிருக்கின்றானோ அவனால்தான் பொது மக்களுக்கு உபயோககரமான காரியங்களைத் தயவு தாட்சண்யமின்றி செய்ய முடியும்.

பொறாமைக்காரர்கள் பொதுநலத் தொண்டனைப் பற்றி இழிவாகப் பேசி அவனை அவமானப்படுத்திக் கொண்டுதான் இருப்பார்கள்.

தமிழ்நாட்டில், வடநாட்டு மொழி எப்படித் தேசிய மொழி ஆகும்? தமிழ்நாட்டில் வடவரின் ஆட்சிக்கொடி எப்படி ஆட்சிக்கொடி ஆகும்?

இந்தியாவிலுள்ள தொழிலாளிகள் தங்கள் ஆயுதங் களையெல்லாம் சரஸ்வதியாகக் கருதி பூஜை செய்தும் இந்தியர்கள் தொழிலில்லாமல் கப்பலேறி வேறு நாட்டிற் குக் கும்பல் கும்பலாகப் போய் மடிகிறார்கள்.

பாரதிதாசன் அவர்கள் புரட்சிகரமான கருத்துகளை வெளிப்படுத்திய முதல் கவியும், கடைசிக் கவிஞரும் ஆவார். அவருக்கு ஈடாக வேறு எந்தக் கவிஞரும் தோன்றவே இல்லை.

பாட்டாளிகளின் கவலையும் தொல்லையும் தொலைய வேண்டுமானால், முதலாளித்துவம் என்பது அடியோடு ஒழிந்தே தீரவேண்டும்.

பார்ப்பனர்களோ பகுத்தறிவுக்கு எதிரிகள். பகுத்தறிவு வளர்ந்தால் தங்கள் சுகபோக வாழ்வு தகர்ந்து விடுமென்று அவர்களுக்குப் பயம்.

என் கஷ்டத்தை சாஸ்திரமும், மதமும், கடவுளும் கவனிக்கவில்லை, ஆதலால், நான் ஏன் அவைகளை மதிக்க வேண்டும்?

மதத்தை நம்பாதவர்களும், மதப்படி நடக்காதவர்களுமே 'மதம் மதம்' என்று நம்மைத் தொல்லைப் படுத்துகிறார்கள்,

உலகத்தில் கடவுள் என்பது இன்னது என்பதாக மனதில் விவரப்படுத்திக் கொள்ளாமலே கடவுளைப் பற்றிய தர்க்கங்களும், தகராறுகளும் நாள்தோறும் நடைபெற்று வருகின்றன.

பார்ப்பானுக்குச் சலுகை பேசுபவர்களும், 'உத்தியோகம்தானா நமது இலட்சியம்?' என்பவர்களும் நமது பச்சை எதிரிகள்.

திராவிட நாட்டில் உள்ள தினசரிப் பத்திரிகைகள் திராவிடர்களின் மாற்றார்களான பிறவி எதிரிகளிடமும், அவர்களின் அடிமைகளிடமுமே இருந்துவருகின்றன.

யார் ஒருவர் மக்கள் நன்மைக்குப் பாடுபடுபவராகவும், ஒழுக்கத்தில் சிறந்து தன்னலமற்ற சேவையில் ஈடுபட்டும் விளங்குகிறாரோ அவர் மற்ற மக்கள் யாவரும் அப்பண்புகளைப் பின்பற்றுவதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறார்.

இந்நாட்டுப் பார்ப்பனர்களும், காங்கிரஸ்காரர்களும் வடநாட்டானின் கங்காணிகளாக இருந்து இந்நாட்டைக் காட்டிக் கொடுத்துவரும் இழிவு செயலைக் காணுந்தோறும்-நினைக்குந்தோறும் நெஞ்சு வேகத்தான் செய்கிறது.

பண ஆசையும், பதவி ஆசையுமே எப்படிப்பட்ட மனிதனையும் கெடுத்து ஒழுக்கமற்ற காரியங்களைச் செய்யத் தூண்டுகிறது.

''அந்நியர்கள் நம்மை மதிக்கமாட்டார்களே; பழிப்பார்களே; எதிர்ப்பு பலமாகி விடுமே என்கிற உலக அபிமானமும், பயமும், பலக்குறைவும் எவரிடத்தில் இருக்கிறதோ அவர்கள் ஒருக்காலமும் உண்மையான சீர்திருத்தத்திற்கு உதவமாட்டார்கள்.

''வேண்டுதலை, வேண்டுதலை'' என்று பார்ப்பனரல்லாதார் ஆண்களும், பெண்களும் தலைமொட்டை அடித்துக் கொள்வதுபோலப் பார்ப்பனர்களில் யாராவது மொட்டை அடித்துக் கொள்கிறார்களா?

சுயநலமில்லாது- எவ்விதப் பொருள் ஊதியத்தையும் கருதாமல்-பொதுத் தொண்டு செய்ய ஒருவர் வந்தார், வருகிறார், வரக் கூடும் என்று உவமை சொல்லக்கூடாத ஒரு மாபெரும் காரியம் வீரமணியின் தொண்டாகும்.

பொதுமக்களுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்று எவன் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறானோ அவன் உடம்பை ஒரு துன்பக்கேணி என்று எண்ணிக்கொள்ள வேண்டும்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது ஒரு நாட்டின் குடிமக்களின் உரிமை, சகலமும் எல்லா வகுப்பாரும் ஏற்றத்தாழ்வின்றிச் சமமாய் அடைய வேண்டியதென்பது தான்.

''இந்தி'' நுழைப்புக்கு திராவிடர்களின் ஏமாந்தத்தனமும், இங்குள்ள காங்கிரஸ்காரர்களின் வடநாட்டு அடிமைப் புத்தியும் ஒரு காரணம்.

உண்மையைப் பேசும்போது அதனால் யாருக்கும் பழிப்பு ஏற்படுமானாலும் அதைப்பற்றிக் கவலை கொள்ளாது அப்பழிப்புக்குக் காரணமாயுள்ளதை ஒழிக்க முயல வேண்டியதே வீரர்களின் கடமையாகும்.

ஆணவமும்-ஏமாற்றிச் செல்வம் குவித்தலும், விளம்பரம் பெறுவதுமே மனிதன் கடமை எனக் கருதுபவர்களுக்கு கலியாணசுந்தரனார் தன்மை கண்களைத் திறக்கச் செய்வதாகும்.

பன்னெடுங்காலமாகவே அறிவீனர்களாய் ஆக்கி வைக்கப்பட்டிருக்கும் திராவிட மக்களுக்குச் சிந்தனை அறிவை உண்டாக்குவதும், திராவிடர்களின் இழிதன்மையைப் போக்குவதும்தான் திராவிடர் கழகத்தின் வேலை.

சுதந்திரம், சுதந்திரம் என்று யாரைப் பார்த்தாலும் அலறுகிறார்களேயொழிய அறிவுச் சுதந்திரம் வேண்டும் என்று எந்த அரசியல் கட்சிக்காரனும் பாடுபடவில்லை.

மனிதனுக்கு முற்போக்கு அறிவும், அக்கறையும் ஏற்பட ஏற்பட, புதிய புதிய உணர்ச்சிகள் தோன்றத்தோன்ற மாறுதல்கள் என்கிற புரட்சி உண்டாகிக் கொண்டுதான் இருக்கும்.

எவன் ஒருவன் தன் வளப்பத்தைச் சமுதாய நலனுக்காகப் பயன்படுத்தாமல் தங்கள் மனைவி மக்களுக்கு என்று விட்டுச் செல்கின்றானோ அவன் தொலைந்தபின் அவனது பேரும், புகழும், செல்வமும் தொலைந்துவிடுகிறது.

நான் திராவிடர் சமுதாயத்தைத் திருத்தி மானமும், அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக்கொண்டு அதே பணியாய் இருப்பவன்.

ஒவ்வொருவரும் எந்த வேலையில் இருந்தாலும், தங்கள் நேரத்தின் ஒரு பகுதியை-உழைப்பின் ஒரு பகுதியை-ஊதியத்தின் ஒரு பகுதியை-பொதுத் தொண்டிற்காக, ஏனைய மக்களுக்காகச் செலவிட வேண்டும்.

பித்தலாட்டங்கள் கொண்ட பத்திரிகைக்காரர்கள் ஒழிந்தால் அன்றி மக்கள் எவ்வித உண்மையையும் உணர முடிவதில்லை.

எனக்கு பூமாலை போடுவதில்பணத்தை விரயம் செய்வது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. பூமாலை எனக்கும் உதவப் போவதில்லை; போடுகிறவனுக்கும் பயன் தருவதில்லை.

சரி என்று பட்டதைச்சொல்லும் தன்மை எவனிடமிருந்தாலும் அவன் வசைகள் பலவற்றிற்கும், மற்றும் அனேக காரியங்களுக்கும் தயாராயிருக்க வேண்டியவன்தான்.

பார்ப்பான் மொழியான சமஸ்கிருதத்தைப் புகுத்துவதற்காகவே ஆச்சாரியார் அப்பொழுது இந்தியை இங்கு நுழைத்தார்.

'இவர்கள் என்ன சொல்வார்கள், அவர்கள் என்ன நினைப்பார்கள்' என்று நினைக்கிற தன்மை ஒரு வித அடிமைத் தன்மையேயாகும்.

பிரதிநிதித்துவத்தாலும், ஓட்டுகளாலும் எல்லா சீர்திருத்தமும் செய்துவிடலாம் என்று நினைப்பது முடியாத காரியமாகும்.

நம் நாட்டில் அறியாமையை வளர்த்து அதன் பலத்தாலே அரசியல் ஆதிக்கம் பெற்றவர்களுக்கும், அறிவுக்கும் எப்படித் தொடர்பு இருக்க முடியும்?

அரசியல் பதவிகளைத் தம் சுயநலத்திற்காகப் பயன் படுத்திக்கொண்ட ஆட்களைத் தெரிந்தனுப்பிய மக்கள் புத்தியுள்ள மக்களென்று நம்மால் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

சுயமரியாதைக்காரனுக்குக் கடமையைத் தவிர, வேறொன்றையும் பற்றிய லட்சியமும், கவலையும் கிடையாது.

இந்திய அரசியல் சட்டம் நமது மக்களை அழுத்தியே வைத்திருக்கக்கூடிய சாசனம் என்றே நான் கருதி வந் திருக்கிறேன்.

திராவிடர் கழக விதை இன்று பரவாத இடம்இல்லை. திராவிடர்களின் திராவிட விதை பதியாத ஒரு உள்ளம் இல்லை.

கெட்டவர்களுடன் விரோதியாய் இருந்து கேட்டை ஒழிக்க முற்படுபவனே அதிக வீரனும், உண்மைத் தொண்டனுமாவான்.

பார்ப்பனர்கள் சாதி விஷயத்தில் எவ்வளவுதான் நமக்கு விட்டுக்கொடுத்தாலும், கிருஷ்ணனும்-கீதையும் உள்ளவரை சாதியும் வருணமும் ஒழியவே ஒழியாது.

தேசமோ, மக்களோ முன்னேற வேண்டுமானால் அறிவும், விஞ்ஞானத்தத்துவமும், ஒழுக்கமும் முன்னேற்ற மடைந்தாக வேண்டும்.

மத சம்பந்தமான கடவுள் சம்பந்தமான விஷயங்களில் மக்களுக்குத் தெளிவேற்படுத்தி அவர்களை ஒழுக்கம் உள்ளவர்களாக-மான உணர்ச்சி உள்ளவர்களாக ஆக்கு வதே திராவிடர் கழகத்தின் முக்கியக் கொள்கை.

பிறவி இழிவும், பிறவி அடிமைத்தனமும் சுமத்தப்பட்ட சுமார் 20 கோடி இந்திய மக்களின் சுயமரியாதைக்கும், விடுதலைக்கும் மனிதத் தன்மைக்கும் கஷ்டப்பட்டு உழைத்தவர் பனகல் அரசர்.

பக்திஎன்பதற்கு முட்டாள்தனம், பேராசை, தன்னலம் என்பதைத்தவிர வேறு சொற்கள் தமிழில் இல்லவே இல்லை.

நான் ஒரு தேசாபிமானியல்லன். தேசாபிமானத்தை புரட்டு என்றும், அது தனிப்பட்டவர்களின் வயிற்றுச் சோற்று வியாபாரம் என்று சொல்லியும் எழுதியும் வரும் ''தேசத் துரோகி'' யாவேன்.

நான் மூட்டை தூக்குவதில் பாரத்தினால் வேதனைப் பட்டிருப்பேனேயொழிய, மூட்டை தூக்குவது அவமானம் என்று ஒருபோதும் வேதனைப்பட்டதில்லை.

எங்கெங்கு அறிவுக்கு மரியாதை இல்லையோ, சமத்துவத்திற்கு இடமில்லையோ அங்கெல்லாம் இருந்து நாத்திகம் முளைக்கிறது.

o o o

''மனித சமூகத்தில் சுயமரியாதை உணர்ச்சியும் சகோதரத்துவமும் தோன்ற வேண்டும். ஒருவன் உயர்ந்தவன், ஒருவன் தாழ்ந்தவன் என்ற எண்ணம் அகல வேண்டும்; உலகுயிர் அனைத்தும் ஒன்றென்னும் எண்ணம் உதிக்க வேண்டும். வகுப்புச் சண்டைகள் மறைய வேண்டும். மேற்சொன்ன கொள்கைகளைப் பரவச் செய்வதற்காக நாம் உழைக்கும் காலத்தில் நம்மைத் தாக்குபவர்களுடைய, வார்த்தைகளையாவது, செய்கைகளை யாவது நாம் சிறிதளவு பயமின்றி, சினேகிதர் - விரோதி

என்ற வித்தியாசம் இல்லாமல் யாவரையும் கண்டிக்க நாம் பயப்படப் போவதில்லை.''

('குடியரசு' 9-4-1933)

''இவ்வியக்கத்தை ஆரம்பிக்கும்போதுகூட நாம் 'என்னையே நம்பி இப்பெரும் பணி ஏற்றேன்' என்ற ஒரு பாட்டில் சொல்லப்படுதல் போல், நம்மையே நாம் பொறுப்பாளியாகவும் உதவியாளாகவும் எண்ணியும் நம்பியுமே தான் இக்காரியத்தில் இறங்கினோமே ஒழிய, நமக்குத் தொண்டர்கள் உண்டு, தலைவர்கள் உண்டு, சிநேகிதர்கள் உண்டு, பண உதவி செய்கிறவர்கள் உண்டு என்று நினைத்து அவர்கள் உதவி கிடைக்கும் என்று நம்பிக்கை வைத்து இவ்வியக்கத்தில் இறங்கவில்லை. ஆதலால் நம் கொள்கைகளை உத்தேசித்து வருகின்றவர்களை வரவேற்கவேண்டியதும், போகிறவர்களைப் போகச் சொல்லவேண்டியதும், ஒழுக்கமற்றவர் என்று கருதப்பட்டவர்கள் தள்ளப்பட வேண்டியதும் இவ்வியக்கத்தின் கடமையாகி விட்டது. இவ்விஷயத்தில் நமக்குள்ள உறுதிதான் இவ்வியக்கத்திற்குச் சொத்தும் அஸ்திவாரமுமே ஒழிய வேறொன்றும் இல்லை.''

('குடியரசு' 16-2-1930)

''மக்கள் நலத்தில் அக்கறை கொண்டு பொதுக் காரியத்தில் முனைந்திருப்பவர்கள் சிறிதாவது ஏதாவது காரியத்தைச் செய்து சாதிக்கவேண்டும் என்று கருதுவார்களேயானால், அவர்களுக்கு முக்கியமான ஒரு யோக்கியதை இருக்க வேண்டும். அதென்னவென்றால், (இப்படிப்பட்ட)போலிக் கூப்பாடுகளுக்கும் கூலி மாரடிப்புகளுக்கும் மனங்கலங்காமல் இருக்க வேண்டியதேயாகும். மற்றும், நமது கொள்கையைப் பற்றி ஊரார் என்ன நினைப்பார்கள்? நம்மைப்பற்றி ஊரார் என்ன பேசுவார்கள்? என்கின்ற விஷயத்தைப்பற்றி எவ்வளவுக்கெவ்வளவு

கவனியாமல், யார் அலட்சியமாய் இருக்கிறார்களோ, அவர்களேதாம் அவ்வளவுக்கவ்வளவு புதிய எண்ணங் களையும், புதிய உணர்ச்சிகளையும், புதிய கொள்கை களையும் மக்களுக்குள் புகுத்தவும், அதைக் காரிய அனுப வத்தில் கொண்டு செலுத்தச் செய்யும் தகுதி உடையவர் கள் ஆவார்கள்''

('குடியரசு' 25-12-1932)

## நமது கழகம் உயர்ந்தது!

நமது கழகக் கொள்கை மிக மிகத் தீவிரமானது. கடவுளை, மதத்தை, சாஸ்திரத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்றாலும் நேரடியாகக் கண்டிக்க எவருக்கும் துணிவே இல்லையே.

நமது கழகத்தினர்கள் இடையேயும் ஒருவருக்கு ஒருவர் குறை கூறித் திரிவதும் இல்லை.

நமது கழகக்கூட்டங்களிலும் காலித்தனம், கலாட்டாக் கள் எதுவும் நடப்பதும் கிடையாது.

நமது கழகத்தை கடந்த 40 ஆண்டுகளாக இப்படியாக நடத்தி வருகின்றோம்.

1940 முதல் எடுத்துக்கொண்டால் எனது பிறந்தநாள் விழாவானது ஆண்டுக்கு ஆண்டு நம்மைப் பார்த்து பிறர் காப்பியடிக்குமாறு வளர்ந்து கொண்டுதான் வருகின்றது.

பணம், காசு விஷயமாய் எடுத்துக் கொண்டாலும் ஸ்தாபனமும் வளர்ந்துகொண்டுதான் வருகின்றது.

நாம் எதிர்பார்த்த லட்சியத்தில் எதிலும் தோற்று விடவும் இல்லை. பெரிதும் வெற்றி பெற்றுக்கொண்டு மற்றவர்களும் ஏற்கும்படிதான் வளர்ந்து வருகின்றோம்.

அரசாங்கமும்கூட நமது தோழர்களை மற்ற கட்சிக் காரர்களைவிட நல்லவண்ணமே மதிக்கின்றது.

இந்த நிலை, பெருமை மாறாமல் இருக்கவேண்டும் இப்படியே இருந்துவரும் நிலையிலேயே நாம் சாக வேண்டும் என்றுதான் ஆசைப்படுகின்றேன்.

நமது தோழர்களும் நாணயமாகவும் கட்டுப்பாடாக வும் இருக்கின்றார்கள்.

நமது கொள்கையில் ஓட்டை விழுந்தால்கூட பரவா யில்லை. ஆனால், நாணயத்தில் - ஒழுக்கத்தில் தவறு இருக்கக்கூடாது. அதுதான் ஒரு கழகத்துக்கு முக்கிய மான பலம்.

('விடுதலை' 11-10-1964)

என்ன காரணத்தாலோ நாம் சவுக்கியமாக உயிர் வாழ்கின்றோம். எப்படியோ உயிர் வாழ்வுக்கு மற்ற எவருடைய தயவையும் எதிர்பார்க்க வேண்டிய அவசிய மில்லாத நிலைமையில் இருந்து வருகின்றோம். மனித னுக்கு இந்த இரண்டு காரியந்தான் மேலான சம்பத்து ஆகும். அதாவது உழைக்க உறுதியும், ஆசையும், அதாவது சோம்பேறித்தனமும் கழிப்பிணித்தனமும் இல்லாத, திடம் உள்ள சரீரமும் தனது வாழ்வில் எந்தத் துறைக்கும் மற்றவர்களை எதிர்பார்க்கவோ, தனக்குச் சரியென்று தோன்றிய அபிப்பிராயங்களை - முடிவுகளை தனது வாழ்க்கைக்காக - வாழ்க்கை நலத்துக்காக மற்ற

வர்களின் தயவுக்காக மாற்றிக்கொள்ளவோ வேண்டிய அவசியமில்லாத - சாகும்வரை சுதந்திர உணர்ச்சியுடன் இருக்கத் தகுந்ததிலே எதுவோ அதுவே மேல்கண்ட உயர்ந்த சம்பத்தாகும். அப்படிப்பட்ட நிலையில் நான் இருப்பதால் (இருக்கிறதாக நான் நினைத்துக்கொண்டிருப்பதால்) அந்த நிலையைப் பாழாக்குவதற்கு இஷ்டம் இல்லாமல் பயனுள்ள வேலையென்று எதைக் கருதுகின்றேனோ அதைச் செய்கிறேன் என்பதல்லாமல் வேறு எவ்வாதப் பிடிவாதமும் எனக்குக் கிடையாது.

நாளை நான் சாகும்போது எனக்கு உணர்வு இருந்தால் நிம்மதியாகத்தான் சாவேனே ஒழிய ஒரு குறையும் இருப்பதாக நான் கருத மாட்டேன். எதையும் நான் குறையாய் விட்டுவிட்டுப் போகிறேன் என்று அதிருப்திப் படமாட்டேன். நான் ஜீவனோடிருப்பதால் அதற்கு ஒரு வேலை இருந்துதானே ஆக வேண்டும்? ஏதாவது ஒரு வேலையில்லாமல் உயிர் வாழ முடியாதே என்று கருதி ஏதோ ஒரு வேலை என்பதில் இதை அதாவது ஜாதி மதமென்ற கொடுமை ஒழிவதும், கடவுள்என்ற மூடநம்பிக்கை ஒழிவதும் மனித சமூகத்திற்கும் நன்மையானது என்கின்ற கருத்தில் அதற்காக என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறேனோ அந்த வேலையைச் செய்கிறேன்.

இன்றைய சுதந்திரவாதிகள் சுதந்திரத்திற்காகச் சுயமரியாதையை அலட்சியம் செய்கிறார்கள். அதாவது அடிமை தேசத்தில் சுயமரியாதைக்கு இடம்ஏது என்கிறார்கள். இது உண்மையிலேயே மூடவாதம் என்று சொல்லுவோம். சுயமரியாதை அற்றவர்களுக்கு - சுயமரியாதை இல்லாதவர்களுக்கு சுதந்திரமேது என்பதுதான் சரியான வார்த்தையாகும்.

('குடியரசு' 18-7-1937)

'சமுதாய முன்னேற்றம்' என்பது நமது நாட்டைப் பொறுத்தவரையில் ரொம்பக் கஷ்டமான காரியம். நாம் யாருக்குச் சொல்கின்றோமோ எந்தச் சமுதாய மக்களுக்குப் பாடுபடுகின்றோமோ அவர்களால் வெறுக்கப்படும் காரியமாகும்.

ஒரு பிச்சைக்காரன் எச்சிலையை எடுத்து சாப்பிடுகிறான் என்றால் கடவுள் படைப்பில் எச்சில் என்பது கிடையாது என்கின்ற நோக்கத்தில் எடுத்து சாப்பிடுவதில்லை. வயிற்றுப் பசியின் காரணமாக அவன் எச்சிலையை எடுத்துச் சாப்பிடுகின்றான். அதுபோல சமுதாயம் முன்னேற்றமடைய வேண்டுமென்கின்ற எனக்குள்ள பசியில் நான் கண்டவற்றைச் சொல்லக்கூடும்.

பெரும்பான்மையான பரிசுத்தத் தன்மையுடைய வாலிபர்களின் கூட்டுறவும் அனுதாபமும், ஆதரிப்பும் மலிந்து கிடப்பதாலும் துணிந்து இறங்கி விட்டோம். முடிவில் இதனுடைய வெற்றிதோல்வியைப் பற்றி நாம் அதிகமான கவலை எடுத்துக் கொள்ளாமல் இந்த முயற்சி சரியா, தப்பா என்பதைப் பற்றி மாத்திரம் தீர யோசித்து தைரியமாயிறங்கி இருக்கின்றோம்.

('குடியரசு' 1-5-1932)

பரீட்சைகள் எல்லாம் உருப்போடுகிற சக்தியை வளர்ப்பதாக இருக்கிறதேதவிர, அறிவை வளர்ப்பதாக இல்லவே இல்லை. அதனாலேதான் படிப்புக்கும் அறிவுக்கும் சம்பந்தம் இல்லை என்றும், படிப்புக்கும் ஒழுக்கத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும் நம் நாட்டிலுள்ள எல்லா பெரியவர்களும் சொல்லிவிட்டார்கள். அப்படிச் சொல்லியும் இன்னமும் நூல் நூற்கவும் நெசவு நெய்யவும் பள்ளிகளில் சொல்லிக்கொடுப்பதும் வெறும் பழைய சரித்திரங்களையும் புராணங்களையும் சொல்லிக் கொடுப்பதையும் பாடமாக

வைத்து வளர்ச்சியும் புதுமையைக்கண்டுபிடிக்கும் அறிவும் தடை செய்யப்பட்டுவிட்டது.

மதத்தை பள்ளிகளில் புகுத்துவதன் மூலம் அது மக்களின் சேர்க்கையையும் ஒற்றுமையையும் உடன் பிறந்த சகோதரர் என்கின்ற உணர்ச்சியையும் கெடுத்து விடுகிறது.

''பார்ப்பனர் அல்லாத கீழ்சாதிக்காரர் எவ்வளவு செல்வம் தேடிக் கோடீசுவரர் ஆனாலும் அந்தஸ்தில் கீழ் தான்! பார்ப்பனர் எவ்வளவு பாப்பர் (ஏழை) ஆனாலும், சோம்பேறியாய் உழைக்காதவராய் இருந்தாலும் மனித சமூகத்தில் மேல்நிலைதான்! இதனால்தான் பார்ப்பனர் பொருளாதாரச் சமதர்மத்தை வரவேற்பதும், சமுதாய சமதர்மத்தை எதிர்ப்பதுமாய் இருக்கிறார்கள்''

('விடுதலை 3-9-1973)

## தாழ்த்தப்பட்டோரை ஒதுக்குவோர் திராவிடர் இயக்கத்தின் எதிரிகளே!

திருச்சியை அடுத்த திருமங்கலம் என்ற ஊரில் தாழ்த்தப் பட்டவர்கள் அக்கிரகாரத்தில் நடந்து போகக் கூடாது என்ற நிலை இருந்தது.

இந்தவித கொடுமைகள் எங்கிருந்தாலும் திராவிடர் இயக்கத்திற்குத் தெரிவியுங்கள். இவைகளையெல்லாம் முதலில் ஓர் மாநாட்டின் மூலம் அரசியலாருக்கு எடுத்துக் கூறுவோம், ஆவன செய்ய வேண்டி. அரசு அலட்சியப் படுத்துமானால் அரசியலாரின் 144 தடைகளையும் மீறு வோம்; மனித உரிமையைப் பெறுவோம். சுருங்கக் கூறு

கிறேன்; தாழ்த்தப்பட்டோரை யார் அடிமைப்படுத்தினா லும் அதைத் திராவிடர் இயக்கம் எதிர்த்துப் போராடும்.

— 'விடுதலை' -4-1947

## தாழ்த்தப்பட்டோருக்கு எதிரானதா!

தபால்காரனுக்கு 70 அல்லது 80 ரூபாய் சம்பளம், போலீஸ்காரனுக்கு 30-35-ம் சம்பளம்; அவனுக்கு மட்டும் ஏன் அதிகம்; இவனுக்கு மட்டும் ஏன் குறைவு என்றுகேட்டால் தபால்காரன் சம்பளத்தைக் குறைத்துவிட வேண்டும் என்று அர்த்தமா? அதுபோலவேதான் ஆதி திராவிடர்க்கு விகிதாசாரப்படி கிடைக்கும் சலுகைகள் பிற்படுத்தப்பட்டோருக்கும் கிடைக்க வேண்டும் என்று கேட்பதும்; விகிதாசாரப்படி சலுகை வந்தால்தான் அவனவன் ஒழுக்கமாயிருப்பான்—நாணயமாயிருக்க முடியும்.

(—'விடுதலை' 20-9-1956)

நம்நாட்டில் தெருவுக்குத் தெரு கோயில் இருப்பதற்கு காரணம் நாம் பொது அறிவுப் பெறக்கூடாது; முட்டாளாகவே இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். இதனை ஒதுக்க வேண்டுமென்றால் தெருவுக்குத் தெரு படிப்பகத்தைத் திறக்கவேண்டும்.

## என் கடன் பணி செய்து கிடப்பதே!

இவ்வளவு பாராட்டுகிறார்கள் என்றால், உண்மையிலேயே நான் இதையெல்லாம் ஒரு கடனாகத்தான் நினைக்கிறேன். இவ்வளவு பாராட்டுதல்கள், புகழ்ச்சி

களையெல்லாம் வாங்கிக்கொண்டு, சும்மா என் இஷ்டம் போல் திரிஞ்சா என்ன அர்த்தம்? இவ்வளவு கடனையும் நான் கட்ட வேண்டுமானால், அவர்கள் எதை நினைத்து என்னைப் பாராட்டினார்களோ, அந்த நினைப்பு ஈடேறும் படியாக நான் நடந்தால்தானே அவர்களுக்கு நான் கடன் காரனாக இருக்க மாட்டேன். இல்லாவிட்டால் இந்த ஆளுக்குக் கொடுத்ததெல்லாம் வீணாப்போச்சு என்று தானே நினைப்பார்கள்! ஆனதினாலே அவர்களிடம் பெற்ற கடனை நாணயமாகத் திருப்பிக் கொடுக்கின்ற அளவிலே அவர்கள் இஷ்டம் பூர்த்தியாகும்படியாக என்னாலான தொண்டை நான் செய்வேன்.

## என் கடமையை நான் செய்வேன்

உள்ளபடியே அது பெரிய காரியந்தான். என்கிட்டே வந்ததினால் அதற்கு மரியாதை இல்லாமல் போயிற்று அவ்வளவுதான். எத்தனை பெரிய காரியம், எத்தனை எதிர்ப்பு, எவ்வளவு பெரிய தடை, வெளியிலே நம் விஷயம் தெரியாமலிருக்க எவ்வளவு இருட்டடிப்பு. எவ்வளவு தொல்லை. என்ன அவன் இப்படியெல்லாம் எழுது கிறான்; இப்படியெல்லாம் புஸ்தகம் போடுகிறான். கேள்வி யில்லையா? இது என்ன கத்தரிக்கா பட்டணமா?'' என்று கேட்பார்கள்; பெரியவங்க ரொம்ப புத்திசாலி. அவங்க சொல்லுவாங்க, 'உட்டுடுறா, ஒருத்தனோட உட்டுடுறா! நீ வேற அதை ஏன் பிரச்சாரம் பண்ணறே? ஒருவனோட விட்டுவிடேன். நீ அதுக்குப் பதில் சொல்லவில்லையென் றால், அதை இருட்டடிக்க வேண்டியதுதான், அதே முறையில் எல்லாக் கருத்துக்களும் ஆட்களாலேயும், பத்திரிகைகளாலேயும் மற்ற செல்வாக்காலேயும் இருட்ட டிக்கப்பட்டு வந்த இந்த இயக்கம் இவ்வளவுக்கு இருக் கிறதென்றால் எவ்வளவு பெரிய வெற்றி!

('விடுதலை' 4-12-64)

இராமன் செத்த பின்பு நாட்டை இராவணன் பிள்ளைகள்தான் ஆண்டார்கள். ஆதலால் கெடுவான் கேடு நினைப்பான் என்பதற்கு வால்மீகி இராமாயணக் கதைப்படி தசரதனும், இராமனுமே பொருத்தமான எடுத்துக் காட்டு ஆவார்கள்.

(—'விடுதலை' 20-4-1960)

''வகுப்புவாரி பிரதிநிதித்துவம்'' என்றால் நம் பார்ப்பனர்களுக்கு இழிவு சேதிகள்போல் காணப்படுகின்றது என்பது நமக்குத் தெரியும்.

வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை சமூகங்களின் அரசியல் கிளர்ச்சியாகவும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எதிர்ப்பதையே பார்ப்பன சமூக அரசியல் கிளர்ச்சியாகவும் இருந்துவருகின்றது என்பதைத் அநேக ஆதாரத்துடன் எடுத்துச் சொல்லலாம்!

('குடியரசு' 1-9-35)

''என்னைப் பொறுத்தவரையிலும் நான் என்றும் கட்சிக்காரனாக இல்லவே இல்லை. எப்பொழுதும் நான் கொள்கைக்காரனாகவே இருக்கிறேன்.''

('விடுதலை' 1-6-1954)

''பாமரனின் ஞானசூனியம், சுய நலக்காரர்களின் எதிர்ப்பு என்னும் இரண்டுபெரிய விரோதிகளைக் கண்டு கலங்காமல் வேலை செய்வோரே இனிவரும் உலகச் சிற்பிகளாக முடியும்.''

கத்தரிக்காய் வெண்டைக்காய் விவசாயம் கல்விக் கூடங்களில் அறிவு பெறும் இடங்களில் கற்றுக்கொடுப்பது

மனிதனுக்கு சோறு தின்பதற்கு, வேட்டி உடுத்திக் கொள்வதற்கு கற்றுக் கொடுப்பது போன்றது.

கல்விக் கூடங்களில் தொழில் கல்வி அளிக்க வேண்டு மானால் ஃபிட்டர், மெக்கானிக் என்று சொல்லும் இயந்திரம் பூட்டுதல், கழட்டுதல், இயந்திர சாமான்களை பற்றிய அறிவு முதலியவைகள் கற்பிக்கப்பட வேண்டும். இனி நம்நாடு கைத்தொழில் நாடு என்பதாகுமாறு விவசா யம் முதல் சமையல் செய்வது வரையிலும் இயந்திரத் தொழில் நாடாக ஆக்கப்பட்டால்தான் நாட்டின் நிலைமையும் உயரும். □

தொண்டு செய்வதில் மனதை செலுத்தினால் நோய் வந்து போவதே தெரிவதில்லை. இன்னும் இருக்கப் போவது கொஞ்ச நாளைக்குத்தான். அதுவரை நம்மால் இயன்றதைச் செய்துவிட்டுப் போகலாம் என்கின்ற எண் ணத்தில் தொண்டாற்றிக்கொண்டு வருகின்றேன். நான் சொல்கிற கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை. நான் சொல்கிற கருத் துக்களைக் கேளுங்கள். இவை என்னுடைய கருத்துக் களே ஒழிய பிறருடைய கருத்துக்கள் அல்ல. என்னுடைய கருத்து என்றாலும் அலட்சியப்படுத்தக்கூடிய கருத்தல்ல. 50 ஆண்டுகளாக நான் செய்து வருகிற தொண்டின் காரணமாக எனக்கு சரியென்று பட்டதை என்அனுபவத் தில் உண்மையென்று தோன்றியதையே எடுத்துச் சொல் கிறேன். அவைகளை உங்களுடைய அறிவைக் கொண்டு சிந்தித்துப் பாருங்கள். உங்களுக்குச்சரியென்று படுவதை மட்டும் ஏற்றுக் கொள்ளுங்கள். மற்றதைத் தள்ளி விடுங்கள்.

□ □ □

# சிந்தனைப் பதிப்பக வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| பக்தர்கள் சிந்தனைக்கு 100 கேள்விகள் | ரு | 1.00 |
| தந்தை பெரியார் பொன்மொழிகள் | ரு | 3.00 |
| அறிஞர் அண்ணா ” | ரு | 3.00 |
| கல்வி வள்ளல் காமராசர் பொன்மொழிகள் | ரு | 2.00 |
| அம்பேத்கார் புரட்சி மொழிகள் | ரு | 2.00 |
| அம்பேத்கார் அறிவுரைகள் | ரு | 2.00 |
| **தந்தை பெரியார்** | | |
| சபாஷ் அம்பேத்கார் | ரு | 1.00 |
| உண்மை முன்னேற்றத்திற்கான வழி | பை. | 0.50 |
| **அறிஞர் அண்ணா** | | |
| பெரியார் பெரும் படையில் சேரவாரீர் | ரு | 1.00 |
| திருக்குறள் | ரு | 1.00 |
| சீர்திருத்த திருமணம் ஏன்? | ரு | 3.00 |
| இராவணகாவியம் ஏன்? | ரு | 1.00 |
| கீலட்சேபம் | ரு | 2.00 |
| பழந்தமிழர் போர்த்திறனும், மொழிவளமும், கவிதை வளமும் | ரு. | 3.00 |
| **அச்சில்** | | |
| தீ பரவட்டும் | ரு | 6.00 |
| கம்பரசம் | ரு | 12.00 |
| **அம்பபேத்கார்** | | |
| இராமனும் கிருட்டிணனும் ஓர் புதிர் | ரு | 8.00 |
| **பாரதிதாசன்** | | |
| இருண்ட வீடு | ரு | 5.00 |
| பரமண்டலத்தில் இருக்கும் பரமசிவனக்கோர் பகிரங்க கடிதம் | ரு | 2.00 |
| அன்பே சிவம் என்பது ஆத்திகர் கரடி | ரு | 1.00 |
| இந்தி எதிர்ப்பு பாடல்கள் | ரு | |
| **V.T. ராஜசேகர்** | | |
| இந்தியாவில் நடைபெறவேண்டியது வர்க்கபோரட்டமா? வர்ண போராட்டமா? | ரு | 5. |
| கோட்சே காந்தியை கொன்றது ஏன்? | ரு | 5.00 |
| சிந்தனையாளர் சாக்ரடீஸ் சொற்பொழிவுகள் | ரு | 2.00 |
| ***இராமாயணத்தை தடை செய்!* -M.R. ராதா** | | 2-00 |

எமது வெளியீடுகளை ரு 50.00—க்கு வாங்கினால் தபால் செலவு இலவசம்

M.O. செய்ய வேண்டிய முகவரி

**சிந்தனைப் பதிப்பகம்**

த.பெ.எண் 93 திண்டுக்கல் — 624001

T18
R004